அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



New No.46,Old,No.4,Ramakrishna Street,
(North Usman Road)T.Nagar,Chennai-6000117.
044-28143306 / 28143307 / Fax 42124624
www.aismk.in

அ.எண். 218/2015
தேதி. 9.9.2015

# ஏமன் நாட்டில் சவுதி கூட்டுப்படைத் தாக்குதலில் 20 இந்தியர்கள் பலி
# சம.க. தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ இரங்கல்

ஏமன் நாட்டு துறைமுகத்தில் சவுதி கூட்டுப் படைகள் நடத்திய குண்டு வீச்சில் 20 இந்தியர்கள் பலியாகி இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏமன் நாட்டில் நடந்துவரும் கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான போர் காரணமாக கடந்த ஏப்ரல் மாதம் முதல் அங்கு இந்திய தூதரகம் மூடப்பட்டிருக்கும் நிலையில் இந்தியர்கள் பலியாகி இருப்பதாக வரும் தகவல்கள் அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது.

மத்திய அரசின் வெளியுறவுத் துறை அமைச்சகம் உடனடியாக இது குறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். பலியான இந்தியர்களின் விபரங்கள் அறிந்து அவர்களது குடும்பங்களுக்கு தகுந்த இழப்பீடுகள் வழங்க வேண்டும்.இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு சமத்துவ மக்கள் கட்சி சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். வெளிநாடு வாழ் இந்திய தொழிலாளிகளுக்கு, குறிப்பாக அடிக்கடி கிளர்ச்சிகள் ஏற்படும் நாடுகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தகுந்த பாதுகாப்பை வழங்குவதை மத்திய அரசு உறுதி செய்ய வேண்டும்.

மேலும் சவுதி அரேபியாவில் வீட்டுக் காவலில் பல தமிழர்கள் சிறைபிடிக்கப்பட்டு அல்லல்பட்டு வருவதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன. தங்களது குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக வெளிநாடுகளுக்கு வேலைக்குச் செல்லும் தமிழர்கள் உள்ளிட்ட, இந்தியர்கள், அதிலும் சாதாரணமான உடலுழைப்புத் தொழிலாளர்கள் மிகவும் கீழ்த்தரமாக நடத்தப்படுகின்ற நிகழ்வுகள் வெளிவந்த வண்ணம் உள்ளன. தங்கும் வசதியின்மை, உணவு சரியாக வழங்காமை, உடலை வருத்தும் அளவுக்கு கடினமான வேலைகள் வாங்குதல், ஊதியத்தைக் குறைத்து வழங்குதல், மற்றும் காலம் தாழ்த்தி வழங்குத, சட்டப்படியான விடுமுறை வழங்காமை என்று மனித உரிமை மீறல்கள் நடந்த வண்ணம் உள்ளன.

வெளிநாட்டு வேலைக்கு ஆள் எடுத்து அனுப்பும் நிறுவனங்கள் உண்மைக்குப் புறம்பான தகவல்களைத் தெரிவித்து ஆசை வார்த்தை கூறி அனுப்பி வைத்து பணம் சம்பாதித்து விட்டு பிறகு கண்டுகொள்வதேயில்லை என்ற குற்றச்சாட்டுகளும் நிலவுகின்றன, எனவே மத்திய அரசு இவற்றையெல்லாம் முறைப்படுத்தும் விதமாக நிறுவனங்களின் நடவடிக்கைகளை கண்காணிக்க வேண்டும். தகுந்த உரிமம் இல்லாமல் நடத்தப்படும் நிறுவனங்கள் மீது கடும் தண்டனைகள் வழங்கி நடவடிக்கை எடுக்க வேண்டும். உரிமம் வழங்குவதில் கடுமையான விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். வேலைக்கு அனுப்பப்பட்ட தொழிலாளர்கள் அந்தந்த நாட்டின் தூதரகங்களோடு நேரடித் தொடர்பு கொண்டு தங்கள் குறை நிறைகளைப் பகிர்ந்து கொள்ள ஏதுவாக வசதி வாய்ப்புகளை உருவாக்கித் தர வேண்டும்.

ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ,
தலைவர்.